රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/සංචිතයට අනුයුක්ත කිරීම් | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2022.10.27 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்

## <u>பொது நிர்வாக அமைச்சின் கீழ் பேணப்பட்டுவரும் உத்தியோகத்தர் குழாத்தை முடிவுறுத்தல்</u>

பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகத்தர் குழாத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக இணைப்புச் செய்யப்பட்ட சில உத்தியோகத்தர்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நீண்ட காலமாக அக்குழாத்தில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ளாது தங்கியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தியோகத்தர்கள் இவ்வாறு உரிய பொறுப்பை நிறைவேற்றாதிருப்பதன் அடிப்படையில் அவ் உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதாகவும், உற்பத்தித்திறன் வாய்ந்த சேவையை பெற்றுக்கொள்ளாமல் சம்பளம் வழங்குவதால், நிதி ரீதியான நட்டம் ஏற்படுவதாகவும், நாட்டின் தற்போதைய சூழலில், அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனாலும், இந்த நிலைமையை விரைவில் மாற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது இந்த அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர் குழாத்தை பேணும் முறைமையை முடிவுறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. இதன்காரணமாக, எதிர்காலத்தில் பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகத்தர் குழாத்திற்கு உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்ய வேண்டாம் என்று தயவுடன் அறியத்தருவதுடன், மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் இந்த அமைச்சின் உள்ளக நிர்வாகப் பிரிவுக்கு எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இணைப்புச் செய்ய வேண்டுமாயின், அதனை இந்த அமைச்சின் முன் அனுமதியுடன் மட்டுமே செய்ய வேண்டும்.

03. மேலும், நீண்ட காலமாக வெளிநாட்டு புலமைப்பரிசில்/பயிற்சிகளில் பங்குபெறும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகளை பேணுவது இந்த அமைச்சின் தொடர்புடைய சேவைகளின் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் பிரிவுகளுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கோப்புகளை அந்தந்த சேவைப் பிரிவுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் ஏற்பாடுகளின் கீழ் சம்பளமற்ற வெளிநாட்டு லீவு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பதிற் கடமை உத்தியோகத்தர்கள் வழங்கப்படுவதில்லை என்பதால், அந்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகள் இந்த அமைச்சுக்கு அனுப்பப்படக்கூடாது.)

04. மேலும், ஒழுக்காற்று விடயம்/விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் தற்போதைய கடமை நிலையத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்படும் சந்தர்ப்பங்களில், பொருத்தமான சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படக்கூடிய வகையில் பரிந்துரைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதுடன், நடைமுறை விடயங்களின் அடிப்படையில், உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டுமாயின், பொருத்தமான சேவை நிலையமொன்றைப் பெற்றுக்கொடுக்கும் வரை தமது அமைச்சு திணைக்களத்தில் தற்காலிகமாக வைத்து இடமாற்றம் தொடர்பான கோரிக்கையினை இந்த அமைச்சுக்கு அனுப்புவது பொருத்தமானதாகும்.

05. மேலும், மாகாண சபை சேவையிலிருந்து உத்தியோகத்தர்களை விடுவிப்பதாயின், பொருத்தமான வேறொரு பணியிடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு போதிய கால அவகாசம் கிடைக்கும் வகையில் அக்கோரிக்கையை இந்த அமைச்சுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருவதுடன், அதன்படி, அவ் உத்தியோகத்தர்களை உடனடியாக பொருத்தமான சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

06. இந்த விடயத்தில் உங்கள் ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன்.

*ஒப்பம்./எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே*

*செயலாளர்,*

*பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,*

*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*

தொலைபேசி : 0112-695738

தொலைநகல் : 0112-695279

மின்னஞ்சல் : pubad.secretary@sltnet.lk